Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 376/2025 PW-1**

Name : வெங்கடேசன்
Father / Husband name : கணேசன்
Village : ரோசணை
Age : 38
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 12.06.2026

Accused present. Defence counsel present. Witness identified by Roshanai PS HC 2735 Tr.Palanivel.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரோசணை காவல் நிலையத்தில் 816 த.கா. பணியிலிருக்கிறேன். கடந்த 07.12.2024 அன்று ரோசணை காவல் நிலையத்தில் மு.நி.கா பணியிலிருந்தபோது நானும் முநி.கா. கோபிகண்ணன், உதவி ஆய்வாளர் கஜேந்திரன் ஆகியோர்கள் பகல் 12.00 மணிக்கு சலவாதி பலாஜி நகருக்கு ரோந்து பணிக்கு சென்றபோது சந்தேகமாக இரண்டு நபர்கள் இருந்தார்கள், அதில் ஒருவர் எங்களை கண்டதும் ஓடிவிட்டார், மற்றொரு நபர் கையில் சீட்டு வைத்திருந்தார். நாங்களை அவரை விசாரித்தபோது அவரின் பெயர் சிவப்பிரகாஷ் மற்றும் முகவரியை சொன்னார். அவரை நாங்கள் சோதனை செய்தபோது குயில் - 13, மயில் - 12 லாட்டரி சீட்டுகள் மற்றும் ஓப்போ செல்போன் - 1, போகோ செல்போன் - 1 மொத்தம் இரண்டு செல்போன்கள் இருந்தது. பின்னர் 12.20 மணிக்கு எதிரியை காரணம் கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். அந்நிய நபர்கள் யாரும் இல்லாததால் தடயப்பொருட்களை மகசரில் கைப்பற்றினார். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2வது சாட்சிக்கையொப்பம் என்னுடையது தான். **அந்தக்கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது என்னிடம் காட்டப்படும் ஒரு புகைப்படத்திலுள்ள இரண்டு செல்போன்கள்

அன்றையதினம் எதிரியிடமிருந்து கைப்பற்றியது ஆகும். **மேற்படி புகைப்படம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மற்றும் தடயத்துடன் காவல் நிலையம் வந்து நிலைக்குற்ற எண் 562/2024, U/s 112(2) BNS r/w 5, 7(3) Lottery Act ன் படி வழக்கு பதிவு செய்தார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் உதவி ஆய்வாளருக்கு கீழ் பணிபுரியும் காவலர் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து புறப்பட்டோம் என்றால் பகல் 12.00 மணிக்கு சென்றேன். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் அவரின் வாகனத்திலும் நானும் கோபிகண்ணனும் ஒரு இருச்சக்கர வாகனத்திலும் சென்றோம். மேற்படி விவரத்தை விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. ரோந்து செல்லும்போது பொருட்கள் எதாவது எடுத்துச்சென்றோமா என்றால் இல்லை. எதிரியிடம் யார் சோதனை செய்தது என்றால் உதவி ஆய்வாளர். மேற்படி விவரத்தை விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். உதவி ஆய்வாளர் லாட்டரி சீட்டுகளை எங்கிருந்து எடுத்தார் என்றால் எதிரியின் கையிலிருந்து எடுத்தார். மேற்படி விவரத்தை விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். லாட்டரி சீட்டுகளை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். லாட்டரி சீட்டுகள் எவ்வளவு ரூபாய் லாட்டரி சீட்டு மற்றும் பரிசு தொகை எழுதியிருந்தது என்றால் தொகை எழுதவில்லை. எந்த மாநில லாட்டரி சீட்டுகள் என்று எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை. சம்பவயிடத்தை சுற்றி 20, 30 வீடுகள் உள்ளது, விளையாட்டு மைதானம், வாட்டர் கம்பெனி உள்ளது என்றால் சரிதான். அருகில் விவசாய நிலம் உள்ளது என்றால் நினைவில்லை. சம்பவயிடம் ஆட்கள் இருக்கும் இடம் என்றால் சரிதான். போலிசாரை தவிர்த்து பொதுமக்கள் யாரையாவது உதவி ஆய்வாளர் விசாரித்தாரா என்றறல் இல்லை. எதிரியை விசாரிக்கும்போது பொதுமக்கள் சென்றகொண்டிருந்தார்கள் என்றால் மதியம் நேரம் என்பதால் மக்கள்

நடமாட்டம் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் கையால் எழுதப்பட்டது என்றால் சரிதான். எதிரியை கைது செய்த பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் மதியம் 1 மணிக்கு மேல் பதிவு செய்யப்பட்டது. கைப்பற்றுதல் மகசரில் குற்ற எண் முன்னதாகவே 12.30 மணிக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்யவில்லை, நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் நாங்கள் புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை. நாங்கள் பாக்கெட் டைரி வைத்திருப்போம் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பு ரோந்து சம்பந்தமாக எழுதியிருப்போம் என்றால் சரிதான். பாக்கெட் டைரியை உதவி ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. பொதுநாட்குறிப்பு, பாக்கெட் டைரியை பார்த்தால் தான் நான் அன்றையதினம் பணியில் இருந்தேனா என்பது தெரியும், வேறு வழக்கில் கைப்பற்றிய பொருட்களை இந்த வழக்கில் காண்பித்துள்ளோம் என்றால் சரியல்ல. செல்போன் எதிரியுடையது, அந்த செல்போனும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை, காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.